# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 267 | 4 Pages | 2.5.2024 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 267 | 4 பக்கங்கள் | 2.5.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பிலிப்பைன்ஸ் கப்பலை தண்ணீர் பீரங்கியால் சேதப்படுத்திய சீனா




சீனா, மே.2

தென்சீனக்கடலில்உள்ளபலசிறியதீவுகளைமலேசியா, பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகள் உரிமை கொண்டாடி வருகின்றன. இதனால் அடிக்கடி தென் சீனக் கடலில் மோதல் நடக்கிறது.

பிலிப்பைன்சுக்கும் சீனாவுக்கும் இடையில் தென் சீனக் கடல் பகுதியில் சீனா ஆதிக்கம் செலுத்த முயற்சித்து வருகிறது.இந்த விவகாரத்தில் சீனாவுக்கும் பிலிப்பைன்சுக்கும் இடையே மோதல் நடந்து வருகிறது.

இந்நிலையில் தற்போது தென் சீனக் கடலில் சென்று கொண்டிருந்த பிலிப்பைன்ஸ் சரக்கு கப்பல் மீது சீன கடலோர காவல்படையின் கப்பல் தண்ணீர் பீரங்கிகள் மூலம் தண்ணீரை பீச்சியடித்து தாக்குதல் நடத்தியது. இதனால் தென் சீனக் கடலில் இன்று பதட்டம் ஏற்பட்டது.

இது குறித்து பிலிப்பைன்ஸ் நாட்டு அதிகாரி ஒருவர் கூறியதாவது :சீனாவின் கடலோரக் காவல்படை தென் சீன கடலில் சென்று கொண்டிருந்த எங்களது பிலிப்பைன்ஸ் கப்பலை இன்று காலையில் நீர் பீரங்கிகளால் 8 முறை சுட்டது. கப்பலின் உபகரணங்கள் சேதமாகி உள்ளது.

சீனாவின் அனுமதியின்றி இக்கடல் பகுதியில் எந்த கப்பலும் செல்ல கூடாது என சீன கடலோர காவல் படை மிரட்டி வருகிறது. சீன கடலோரக் காவல்படையின் துன்புறுத்தல் மற்றும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மிகவும் கண்டிக்க தக்கது என தெரிவித்தார்.

## கோவிஷீல்டு தடுப்பூசி பக்கவிளைவை ஏற்படுத்தும்: இங்கிலாந்து நிறுவனம் ஒப்புதல்




லண்டன்: மே.2

கடந்த 2019ம் ஆண்டு இறுதியில் சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.


இதையடுத்து கொரோனா தடுப்பூசியை பல்வேறு நாடுகள் கண்டுபிடித்தன. இதில் இங்கிலாந்தை சேர்ந்த அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம் மற்றும் ஆக்ஸ்போர்ட்டு பல்கலைக்கழகம் இணைந்து தடுப்பூசியை உருவாக்கின.

இந்த தடுப்பூசி இந்தியாவில் கோவிஷீல்டு என்ற பெயரில் விநியோகிக்கப்பட்டது. இதற்கிடையே அஸ்ட்ராஜெனெகா நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசியை செலுத்திய பிறகு மூளையில் பாதிப்பு ஏற்பட்டதாக கூறி ஜேமி ஸ்காட் என்பவர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இதேபோல் 51 வழக்குகள் நஷ்டஈடு கேட்டு தொடரப்பட்டன. இவ்வழக்குகள் மீது விசாரணை நடந்து வருகிறது. இந்த நிலையில் அஸ்ட்ராஜெனெகா நிறுவனம் கோர்ட்டில் அளித்த ஆவணத்தில், கோவிட் தடுப்பூசி ஒரு அரிய பக்க விளைவை ஏற்படுத்தும் என்று ஒப்புக்கொண்டதாக தி டெலிகிராப் ஊடகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தடுப்பூசி அரிதான சந்தர்ப்பங்களில், ரத்த உறைவு மற்றும் குறைந்த பிளேட்லெட் எண்ணிக்கைக்கு (டி.டி.எஸ்.) வழிவகுக்கும் நிலையை ஏற்படுத்தும். ஆனால் இது மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே நடக்கும். எனவே பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவில் துப்பாக்கி சூட்டில் 4 போலீசார் பலி



வாஷிங்டன்: மே.2

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாகாணம் சார்லோட் நகரில் உள்ள ஒரு வீட்டில் தேடப்படும் குற்றவாளிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் போலீசார் அங்கு சென்றனர்.

அப்போது அந்த வீட்டில் இருந்த 2 வாலிபர்கள், போலீசார் மீது திடீரென்று துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு தாக்குதல் நடத்தினார்கள். உடனே போலீசாரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

மூன்று மணி நேரம் நீடித்த இந்த துப்பாக்கி சண்டையில் 4 போலீசார் உயிரிழந்தனர். 4 பேர் காயம் அடைந்தனர். துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்திய ஒரு நபர் உயிரிழந்தார். மற்றொருவர் தப்பி ஓடிவிட்டார்.

அவரை போலீசார் தீவிரமாக தேடி வருகிறார்கள். இதுகுறித்து காவல்துறைத் தலைவர் ஜானி ஜென்னிங்ஸ் கூறும் போது, நமது சமூகத்தை பாதுகாப்பாக வைத்திருக்க முயற்சித்த சில ஹீரோக்களை இன்று நாம் இழந்துவிட்டோம். குறிப்பிட்ட வீட்டை போலீசார் நெருங்கும்போது தேடப்படும் சந்தேக நபர் துப்பாக்கியால் சுட்டார். அவர் வீட்டு வாசலில் கொல்லப்பட்டார். அவர் சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருந்த குற்றவாளியாகத் தேடப்படுபவர். மோதலுக்குப் பிறகு அந்த வீட்டில் ஒரு பெண்ணும் 17 வயது ஆணும் இருந்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்றார்.

# பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அரசு நிவாரண உதவிகள் வழங்கப்படும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மே.2

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

சேலம் மாவட்டம் ஏற்காடு மலைப்பகுதியில் நேற்று மாலை தனியார்பேருந்துவிபத்துக்குள்ளாகி 5 பேர் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் துயரத்துக்குள்ளானேன்.

விபத்து குறித்த தகவல் நேற்று கிடைத்ததும், உடனடியாக மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டு மீட்பு நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள அறி





வுறுத்தியதோடு, காயமடைந்தவர்களுக்கு தேவையான அனைத்து உரிய உயிர்காப்பு சிகிச்சைகளும் அளிக்கப்படுவதை உறுதிசெய்யவும் உத்தரவிட்டிருக்கிறேன்.

இவ்விபத்தில் உற்றாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அரசு நிவாரண உதவிகள் தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் குரு பெயர்ச்சியை முன்னிட்டு சுவாமி தரிசனம்

விழுப்புரம், மே.2

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம்கா ரணை ஊராட்சியில்கஸ்பாகாரணைகிராஜுவேட்ஸ் அசோசியேஷன் reg no: 49/2023 சார்பாக நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தலைவர் வீ.பஞ்சன் தலைமை வகித்தார். துணை தலைவர் சு.ஆறுமுகம் மற்றும் துணை செயலாளர் ரா.சுரேஷ் குமார் முன்னிலை வகித்தனர். அசோசியேஷன் நிர்வாகிகள் நடராஜன் சிவா உறுப்பினர்கள் சதிஷ் அறிவழகன் கலந்து கொண்டனர்

பொதுமக்கள் அனைவருக்கும் நீர் மோர் சர்பத் தர்பூசணி வழங்கப்பட்டது. கோடை காலம் முடியும் வரை தினமும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்பதனை நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் செயலாளர் வீ.மகாவிஷ்ணு நன்றி கூறினார்.

# கஸ்பாகாரணை கிராஜுவேட்ஸ் அசோசியேஷன் சார்பாக நீர் மோர் பந்தல் திறப்பு

விழுப்புரம், மே.2

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம்கா ரணை ஊராட்சியில்கஸ்பாகாரணைகிராஜுவேட்ஸ் அசோசியேஷன் reg no: 49/2023 சார்பாக நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தலைவர் வீ.பஞ்சன் தலைமை வகித்தார். துணை தலைவர் சு.ஆறுமுகம் மற்றும் துணை செயலாளர் ரா.சுரேஷ் குமார் முன்னிலை வகித்தனர். அசோசியேஷன் நிர்வாகிகள் நடராஜன் சிவா உறுப்பினர்கள் சதிஷ் அறிவழகன் கலந்து கொண்டனர்




பொதுமக்கள் அனைவருக்கும் நீர் மோர் சர்பத் தர்பூசணி வழங்கப்பட்டது.

கோடை காலம் முடியும் வரை தினமும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்பதனை நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் செயலாளர் வீ.மகாவிஷ்ணு நன்றி கூறினார்.

# பிரதமர் மோடி தோல்வியின் விரக்தியில் பேசுகிறார் செல்வப்பெருந்தகை

சென்னை, மே.2

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

மக்களவைத் தேர்தலின் முதல், இரண்டாம் கட்டம் முடிந்த நிலையில் மிகுந்த பதற்றத்துடனும், தோல்வி பயத்தினாலும் பிரதமர் மோடி அடிப்படை உண்மைகளுக்கு புறம்பாக ஆதாரமற்ற அவதூறான கருத்துகளை தேர்தல் பரப்புரையின் போது பேசி வருகிறார். நேற்று மும்பையில் உரையாற்றும் போது, நான் உயிருடன் இருக்கும் வரை மத அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை அனுமதிக்கமாட்டேன் என்று பேசியிருக்கிறார்.

10 ஆண்டுகாலம் பிரதமராக இருந்த ஒருவருக்கு இட ஒதுக்கீடுகள் மதத்தின் அடிப்படையில் வழங்கப்படுவது அல்ல. சமூக, கல்வி ரீதியாக பின்தங்கிய மக்கள் எந்த மதத்தில் இருந்தாலும், அவர்கள் எந்த சாதியை சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை அந்தந்த மாநில அரசுகள் அமைக்கும் பின்தங்கியோர் ஆணையம் வழங்குகிற தரவுகளின்படி அந்தந்த மாநில அரசுகள் இடஒதுக்கீடு வழங்குகின்றன.

இந்த அடிப்படையை புரிந்து பேசுகிறாரா?அல்லதுதிட்டமிட்டு மக்களை மதரீதியாக பிளவுபடுத்தி, வாக்கு வங்கியை விரிவுபடுத்தி வெற்றி பெற்று விடலாம் என்று பகல் கனவு காண்கிறாரா என்று தெரியவில்லை.





கர்நாடகா, ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் முஸ்லிம் மதத்தில் உள்ள பின்தங்கிய சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இதை உச்சநீதிமன்றம் உறுதி செய்திருக்கிறது. உண்மை நிலை இப்படியிருக்க காங்கிரஸ் கட்சி பின்தங்கியோரின் இடஒதுக்கீட்டை பறித்து இஸ்லாமியர்களுக்கு வழங்க சதித் திட்டம் தீட்டுகிறது என்று ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யை திரும்ப திரும்ப கூறி இந்தியாவின் கோயபல்ஸ் ஆக பிரதமர் மோடி செயல்பட்டு வருகிறார். கடந்த 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற வில்லை. அதுகுறித்து பிரதமர் மோடி பரப்புரையில் பேசுவதே இல்லை. வேலையில்லாதிண்டாட்டம்,விலைவாசி உயர்வு, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை மறுப்பு, போன்றவற்றின் காரணமாக மக்களிடையே பா.ஜ.க. மீது கடுமையான எதிர்ப்பு அலை வீசிக் கொண்டிருக்கிறது. வடமாநிலங்களில் பா.ஜ.க. எதிர்ப்பு அலை தலை தூக்கியிருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் நாட்டை கொள்ளையடிப்பார்கள் என்று கூறுகிறார் பிரதமர் மோடி. நாட்டிலுள்ள சொத்துக்களை எல்லாம் 20, 25 கோட்டீஸ்வரர்கள் 45 சதவிகித மொத்த சொத்துகளை கொள்ளையடிப்பதற்கு துணை போனவர் இப்படி பேசுவது விந்தையாக இருக்கிறது. இதன்மூலம் தொழிலதிபர்களிடமிருந்து தேர்தல் பத்திர நன்கொடை மூலம் ரூபாய் 8,000 கோடி கொள்ளையடித்த பிரதமர் மோடி காங்கிரஸ் கட்சியைப் பற்றி பேசுவதற்கு எந்த அருகதையும் கிடையாது. எனவே, 2024 மக்களவைத் தேர்தல் என்பது இந்திய மக்களுக்கு வாழ்வா? சாவா? என்பதே பிரச்சினை. இந்தியாவின் எதிர்காலமே மக்களவை தேர்தல் முடிவை பொறுத்திருக்கிறது. இந்தியாவில் சர்வாதிகார, பாசிச, மக்கள் விரோத ஆட்சி அகற்றப்பட வேண்டுமெனில் பா.ஜ.க.வை தோற்கடிப்பது மிகமிக அவசியம் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

இதன் காரணமாகவே இந்தியா கூட்டணியின் வெற்றி நாளுக்கு நாள் ஒளிர்ந்து, உறுதி செய்யப்பட்டு வருகிறது. மோடி எத்தகைய கபட நாடகத்தை ஆடினாலும் கடந்த 2014, 2019ல் மக்கள் ஏமாந்ததைப் போல 2024ல் மக்களை ஏமாற்ற முடியாது. மோடியின் தலைமையில் மீண்டும் ஆட்சி அமைந்தால் இந்தியா என்ன ஆகும் என்ற பயம் மக்களிடையே ஏற்படு வதற்கு அவரது உரைகள் முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. பிரதமர் மோடியின் இத்தகைய அரசமைப்புச் சட்ட விரோத மதநல்லிணக்கத்தை சீர்குலைக்கிற, வெறுப்பு பேச்சுகளை விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு தொடர்ந்து பேச பேச பா.ஜ.க. படுதோல்வி அடைவது உறுதியாகும். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



காஞ்சிபுரம் ஓரிக்கை பாரதிதாசன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மாநில அளவில் நடைபெற்ற சிலம்ப போட்டியில் ஒற்றை கொம்பு தனித்திறமையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி டாக்டர் ஆர். கே. ஸ்போட்ஸ் அகாடமியில் சிலம்பம் பயின்று வரும் மாணவ மாணவிகள் சிலம்பம் பயிற்றுனர் டாக்டர் சு.ராதாகிருஷ்ணன் தலைமையில் ஆண்கள் அஜேஸ் ரத்தினசாமி, லோகேஷ்சரன், ஹேமச்சந்திரன் , ரோஷன் , பெண்கள் கிருத்திகா , அஸ்மான்ஜும் , ஹெப்சிபாமேரி , ரித்திகா , ஆகியோர் கலந்து கொண்டு மாநில அளவில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பிடித்து பரிசு கோப்பை வென்றனர் அனைவரையும் இவர்களை பாராட்டினர்



மதுரை மாவட்டம் பிபிகுளம் கிளை தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் மத்திய சங்கம் மற்றும் தமிழக கட்டிடத் தொழிலாளர்கள் மத்திய சங்கம் சார்பாக மூன்றாம் ஆண்டு துவக்க விழா நடைபெற்றது இனிதே நடைபெற்றது மாநிலத் தலைவர் பொன் குமார் ஆணைக்கிணங்க கிளை தலைவர் பா பாண்டி வி கண்ணன் கிளை பொருளாளர் மாநில இளைஞரணி செயலாளர் சமைய செல்வம் மாவட்டச் செயலாளார் பிச்சை பாண்டி மாவட்ட செயலாளர் வீரக்குமார் மாவட்டத் துணைத் தலைவர் லே குமரேசன் மற்றும் எம் எஸ் பாலு கலந்து கொண்டனர்

# தென்னையை தாக்கும் சிவப்புக்கூன் வண்டை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து செயல்முறை கூட்டம்



மதுரை, மே.2

மதுரை வேளாண் கல்லூரி மாணவர்கள் கிராமப்புர வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ் பழனி பகுதியில் தங்கி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர். இந்நிலையில் வேளாண் கல்லூரி மாணவர் ர.ச. ரீவத்சா (இறுதி ஆண்டு) பாலசமுத்திரம் பேரூராட்சி புதச்சி கிராமத்தில் உள்ள தென்னை விவசாயிகளுக்கு பெரோமோன் பொறி மூலம் தென்னையை தாக்கும் சிவப்புக் கூன் வண்டை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து செயல்முறை கூட்டம் நடத்தினார். இச்செயல்முறை கூட்டத்தில் தென்னை விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

# விவசாயிகள் தொழிலாளர் கட்சி தலைவரும் கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தலைவருமான பொன்.குமார் தலைமையில் நடைபெற்றது



பெரம்பலூர், மே.2

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, பெரம்பலூர் கட்டுமான தொழிலாளர்கள் சார்பில், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து ஆத்தூர் சாலையில் உள்ள அன்பு திருமண மண்டபம் வரையில் பேரணி நடைபெற்றது. இந்த பேரணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பொன்.குமார் பேசுகையில்,

தமிழகத்தில் 18 வாரியங்கள் உள்ளது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இத்தனை வாரியங்கள் கிடையாது. தமிழகத்தில் இத்தனை வாரியங்களை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

காலை உணவுத் திட்டம், பெண்கள் இலவச பேருந்து பயணம், உயர்கல்வித் தொகை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இதுதான் திராவிட மாடல் ஆட்சி. தமிழகத்தை பின்பற்றி கனடா மற்றும் இந்தியாவின் மற்ற மாநிலங்களில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கட்டிடத் தொழிலாளர்கள் ஓய்வு பெற்றால் ரூ.1000 ஆக உள்ளதை, முதலமைச்சரிடம் பேசி ரூ.2000 ஆக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழிலாளர்களின் உரிமைக்காக உருவாக்கப்பட்ட நாள் மே 01. 1982 எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக ரூ.10. ஆயிரம் கேட்டு அவரது வீட்டிற்கு முன்பு 428 பேர் மறியல் போராட்டம் செய்தோம். அவர் எதுவும் வழங்கவில்லை. எங்களை சிறையில் அடைத்தார்.

தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொழிலாளர்கள் இறந்தால் ரூ.5 லட்சம் என்று அறிவித்துள்ளார். 33 லட்சம் உறுப்பினர்கள் இருந்த இந்த கட்டுமான தொழிலாளர்கள் சங்கத்தில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 10 லட்சமாக குறைந்து விட்டது.

தற்போதைய தி.மு.க.ஆட்சி வந்த பிறகு 15 லட்சம் உறுப்பினர்களை சேர்த்துள்ளோம். தற்போது மொத்தம் 25 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். கட்டிடத்தை தோல்வி பயத்தில் பிரதமர் மோடி உளறி வருகிறார். 44 சட்டங்களை குறைத்து, 4 சட்டமாக மாற்ற பிரதமர் முயற்சி செய்து வருகிறார். மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தவுடன் தொழிலாளர்கள் சட்டம் பாதுகாக்கப்படும். தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்படும் என்று பொன்.குமார் பேசினார்.

இந்த கூட்டத்தில், தி.மு.க.பெரம்பலூர் மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், கட்டுமானம் மற்றும் மனைப்பிரிவு மாநில இணைச் செயலாளர் பொறியாளர் சிவக்குமார், கட்டுமான தொழிலாளர்கள் சங்கம் மாவட்ட தலைவர் சிவபெருமாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் தொழிலாளர் கட்சி தலைவரும் கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தலைவருமான பொன்.குமார் செய்தியாளர்களிடம் பேசுகையில், மத்தியில் மாற்று அரசு அமையவேண்டும். தமிழகத்தில் 40 தொகுதிகளிலும் தி.மு.க.கூட்டணி வெற்றி பெறும். பருவ நிலை மாற்றம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வெயிலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். செயற்கை மழை பெய்ய முதல்வரிடம் கூறி நடவடிக்கை எடுக்கப்படும்,

தொழிலாளர்களுக்கு வீடு கட்ட ரூ.4 லட்சம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்த முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு பொன்.குமார் செய்தியாளர்களிடம் கூறினார்.

# இரு கார்கள் நேருக்கு நேர் மோதல்: ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பலி



சத்தியமங்கலம், மே. 2

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே இன்று காலை இரு கார்கள் நேருக்கு நேர் மோதின. இந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

விசாரணையில் விபத்தில் இறந்தவர்கள் கோவை, சிறுமுகைஜடையம்பாளையத்தைச் சேர்ந்தஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்தது.

விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை குறைப்பு



சென்னை, மே. 2

எண்ணெய் நிறுவனங்கள் கச்சா எண்ணெய் விலை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை கருத்தில் கொண்டு சமையல் மற்றும் வணிக சிலிண்டர் விலையை மாற்றியமைக்கும். அந்த வகையில் மாதத்தின் முதல் நாளான இன்று விலை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டரின் விலை 19 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. சென்னையில் இதுவரை வரை 1930 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை தற்போது 19 ரூபாய் குறைக்கப்பட்டு 1911 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால் சமையல் சிலிண்டர் விலை குறைக்கப்படவில்லை. சென்னையில் 1911 ரூபாய் விற்பனை செய்யப்படும் நிலையில் டெல்லி, மும்பை, கொல்கத்தா பெங்களூரு உள்ளிட்ட நகரங்களில் விலையில் சிறிது மாற்றம் இருக்கும்.

கடந்த மாதமும் வணிக சிலிண்டரின் விலை குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# முதலமைச்சரிடம் கஞ்சாவுடன் மனு கொடுக்க வந்த பா.ஜ.க. நிர்வாகி 6 பிரிவுகளில் வழக்குப்பதிவு




மதுரை, மே. 2

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குடும்பத்தினருடன் ஓய்வு எடுக்க கொடைக்கானல் செல்வதற்காக நேற்று காலை மதுரை விமான நிலையம் வந்தார். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து மனு கொடுப்பதற்காக கஞ்சா பொட்டலத்துடன் பா.ஜ.க. ஓ.பி.சி. அணி மாநில செயற்குழு உறுப்பினர் சங்கர் பாண்டி வந்திருந்தார். விமான நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் அவரைதடுத்துநிறுத்தினர். இதில் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து, போலீசார் அவரிமிருந்த மனுவை கைப்பற்றி விசாரணை நடத்தினர். பின்னர் அவரை கைது செய்தனர்.

இதையடுத்து விமான நிலையத்தில் பாதுகாப்பிலிருந்த போலீசாரை ஆபாசமாக திட்டியது, அரசு பணி செய்யவிடாமல் தடுத்தது, வெடிகுண்டு வைத்து கொலை செய்து விடுவேன் என மிரட்டியது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்தது என்பது உள்ளிட்ட ஆறு பிரிவின் கீழ் மதுரை அண்ணா நகர்போலீஸ்நிலையத்தில் பணி புரியும் மாதவன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் அவனியாபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து பா.ஜ.க. நிர்வாகி சங்கர் பாண்டியை கோர்ட்டில் ஆஜர்படுத்தி மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்.

# நீர் ஆவியாதலை தடுக்க பூண்டி, சோழவரம் ஏரி தண்ணீர் புழலுக்கு அனுப்பபடுகிறது



திருவள்ளூர், மே. 2

சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், கண்ணன்கோட்டை ஏரிகள் உள்ளன. இந்த 5 ஏரிகளிலும் 11 ஆயிரத்து 757 மில்லியன் கனஅடி தண்ணீர் சேமித்து வைக்கலாம். இன்றுகாலைநிலவரப்படி குடிநீர் ஏரிகளில் மொத்தம் 6 ஆயிரத்து 702 மில்லியன் கனஅடி (6.7 டி.எம்.சி) தண்ணீர் இருப்பு உள்ளது.


கடந்த சில நாட்களாக கடுமையான கோடை வெப்பம் நிலவி வருவதால் ஏரியில் உள்ள தண்ணீர் வேகமாக ஆவியாகி வருகிறது. ஏற்கனவே பூண்டி ஏரியில் 898 மில்லியன் கனஅடியும் (மொத்த கொள்ளளவு 3231 மி.கன அடி), சோழவரம் ஏரியில் 108 மில்லியன் கனஅடியும் (மொத்த கொள்ளளவு 1081) தண்ணீர் குறைந்த அளவே உள்ளன. தற்போது நிலவும் கோடை வெயிலின் தாக்கத்தில் நீர் ஆவியாதலை தடுக்கும் வகையில் இந்த 2 ஏரிகளில் உள்ள தண்ணீரையும் புழல் ஏரிக்கு அனுப்பும் பணி நடந்து வருகிறது. இதனால் புழல் ஏரிக்கு நீர் வரத்து 425 கனஅடியாக உள்ளது. வெயில் சுட்டெரித்து வரும் நிலையில் சோழவரம் ஏரி விரைவில் முழுவதும் வறண்டு விடும் நிலையில் உள்ளது.

தற்போது குடிநீர் ஏரிகளில் உள்ள 6.7 டி.எம்.சி. தண்ணீரை வைத்து சென்னையில் இன்னும் 6 மாதத்திற்கு தட்டுப்பாடின்றி குடிநீர் சப்ளை செய்ய முடியும் எனவே வரும் மாதங்களில் சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு வராது என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளது.

மேலும் பூண்டி ஏரியில் நீர் இருப்பு வேகமாக குறைந்து வருவதால் கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்படி ஆந்திரமாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தண்ணீரை பெறவும் நீர்வளத்துறை அதிகாரிகள் திட்டமிட்டு வருகிறார்கள்.

புழல் ஏரியின் மொத்த கொள்ளளவு 3300 மி.கன அடி. இதில் தற்போது 2960 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3645 மி.கனஅடி. இதில் 2356 மி.கனஅடி தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் சென்னை குடிநீர் ஏரிகளில் மொத்தம் தண்ணீர் இருப்பு 8 டி.எம்.சி ஆக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது ஒரு டி.எம்.சி தண்ணீர் குறைவாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# 45 மில்லி மீட்டர் மழை பதிவு: திற்பரப்பு அருவியில் மிதமான அளவு தண்ணீர் கொட்டுகிறது



நாகர்கோவில், மே.2

குமரி மாவட்டத்தில் சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நேற்று காலையில் மாவட்டம் முழுவதும் சுட்டெரிக்கும் வெயில் அடித்து வந்த நிலையில் மேற்கு மாவட்ட பகுதியில் மதியத்துக்கு பிறகு இடிமின்னலுடன் மழை பெய்தது.

தக்கலை பகுதியில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக இடைவிடாது மழை பெய்ததையடுத்து அங்கு வெப்பம் தணிந்தது. மார்த்தாண்டம், திங்கள்சந்தை, களியக்காவிளை, திருவட்டார், ஊரம்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளிலும் மழை வெளுத்து வாங்கியது.

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை பகுதிகளிலும் மலையோர பகுதிகளிலும் மழை பெய்தது. பத்துகாணி மலைப்பகுதியில் கனமழை பெய்தது. அங்கு ஆலங்கட்டி மழை பெய்தது. அதை கையில் எடுத்து பொதுமக்கள் ரசித்தனர். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆலங்கட்டி மலையை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

களியல், சுருளோடு, இரணியல், கோழிப்போர்விளை, முள்ளங்கினாவிளை மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. தக்கலையில் அதிகபட்சமாக 45 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. திற்பரப்பு அருவி பகுதியில் விட்டு விட்டு பெய்த மழையின் காரணமாக அருவியில் மிதமான அளவு தண்ணீர் கொட்டி வருகிறது. அருவியில் குளிப்பதற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர்.

அவர்கள் ஆனந்த குளியலிட்டு மகிழ்ந்தனர். அணைப்பகுதிகளிலும் மலையோர பகுதிகளிலும் மழை பெய்ததையடுத்து பேச்சிப்பாறை அணைக்கு வரக்கூடிய நீர் வரத்து சற்று அதிகரித்துள்ளது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் இன்று காலை 43.60 அடியாக உள்ளது. அணைக்கு 372 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 47.45 அடியாக உள்ளது. அணைக்கு 43 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 21 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சிற்றார் 1 அணை நீர்மட்டம் 9.28 அடியாகவும், சிற்றாறு 2 அணை நீர்மட்டம் 9.38 அடியாகவும், பொய்கை அணை நீர்மட்டம் 15.90 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணை நீர்மட்டம் 16.90 அடியாகவும் உள்ளது.

நாகர்கோவில் நகருக்கு குடிநீர் சப்ளை செய்யப்படும் முக்கடல் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் சரிந்து வருகிறது. இன்று காலை அணையின் நீர்மட்டம் 3.90 அடியாக இருந்தது. மாவட்டம் முழுவதும் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:

பேச்சிப்பாறை 7.2, பெருஞ்சாணி 7.6, சிற்றாறு 115.2, சிற்றாறு 212.4, களியல் 10, குழித்துறை 23.2, புத்தன் அணை 5.8, சுருளோடு 28.4, தக்கலை 45, குளச்சல் 4, இரணியல் 5, பாலமோர் 2.4, திற்பரப்பு 11, கோழிப்போர்விளை 32.5, அடையாமடை 4.2, முள்ளங்கினாவிளை 16.8.

மேற்கு மாவட்ட பகுதிகளில் மழை பெய்த நிலையில் கிழக்கு மாவட்ட பகுதிகளில் சுட்டெரிக்கும் வெயில் அடித்தது. நாகர்கோவில் கன்னியா குமரி, அஞ்சுகிராமம் பகுதிகளில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்கு ஆளானார்கள். சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஏராளமான பொதுமக்கள் வந்திருந்தனர். அவர்கள் வெப்பத்தின் தாக்கத்தால் அவதிப்பட்டனர். இன்று காலையிலும் மாவட்டம் முழுவதும் சுட்டெரிக்கும் வெயில் அடித்தது. வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமான பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கி கிடக்கிறார்கள்.

# ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோவிலில் குரு பெயர்ச்சி 2024 பரிகார ஹோமம்



புதுக்கோட்டை, மே. 2

புதுக்கோட்டை தெற்கு 4 ஆம் வீதி பெரிய மார்க்கெட் பகுதியில் உள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோவிலில் அனுமன் திருச்சபை சார்பில் குரு பெயர்ச்சி 2024 பரிகார ஹோமம் நடைபெற்றது.குருபகவான் மேஷம் ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு பெயர்ச்சி அடைகிறார். அதனை முன்னிட்டு பரிகார ஹோமம் நடைபெற்றது. இதையொட்டிகோவிலில் குருகணபதி ஹோமம், தட்சாணமூர்த்தி ஹோமம், நவக்கிரக ஹோமம், தொடர்ந்து பரிகார பூஜைகள் நடந்தது இதில் பல்வேறு ராசிக்காரர்களின் பெயர்களுக்கு ஆலய சிவாச்சாரியர் கே. மணி குருக்கள் ரவிக்குருக்கள் ஸ்ரீநிவாசன் குருக்கள் ஹரிகுருக்கள் கோகர்ணேஸ்வரர் குருக்கள் ஆகியோர் பரிவாரங்கள் செய்தனர் பின்னர் அபிஷேகம் மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஆலயத்திலுள்ள ஆஞ்சிநேயர் சுவாமிக்கு தீபாராதனை நடைபெற்றது நிகழ்வின் ஏற்பாடுகளை அனுமன் திருச்சபையினர் ஆனந்த் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தனர். திரளான பக்தர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

# மக்கள் பணிகளை செய்ய விடாமல் தடுத்து நிறுத்தியது கொலை மிரட்டல் விடுத்தது போன்ற காரணங்களுக்காக காவல் ஆணையாளரிடம் மனு



சேலம், மே.2

சேலம் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தை சார்ந்த ராதா செல்வம் என்பவர் கடந்த நான்காண்டுக்கு மேலாக பூலாவரி அக்ரஹாரம் ஊராட்சி மன்ற தலைவராக மக்கள் பணி செய்து வருகிறார்இந்த நிலையில் தற்பொழுது பாரத பிரதமர் 15வது மத்திய மாநில நிதி குழு திட்டத்தில் அந்த ஊராட்சி முழுவதும் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது அந்தபகுதியில் உள்ள திமுக ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர் மற்றும் அவரது கணவர் சேகர் இருவரும் இந்த குடிநீர் இணைப்பு பணியை செய்ய கூடாது அப்படி செய்வதாக இருந்தால் எங்களுக்கு பத்தாயிரம் முதல் 15000 வரை தர வேண்டும் அப்படி கொடுத்தாலும் கூட ஆளும் கட்சி நிர்வாகிகளை கேட்டு தான் எந்த பணியாக இருந்தாலும் செய்ய வேண்டும்

என்று பெண் ஊராட்சி மன்ற தலைவியை பணி செய்ய விடாமல் தடுத்துள்ளனர் தொடர்ந்து அவரை மிரட்டியதாகவும் கூறப்படுகிறது

இந்த நிலையில் இன்று பூலாவரி அக்ரஹாரம் ஊராட்சி பகுதியில் பணிகளை செய்ய விடாமலும் குடிநீர் இணைப்பிற்கு பத்தாயிரம் முதல் 15000 வரை தன்னிடம் வழங்க வேண்டும் என்று மிரட்டி வரும் திமுக ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர் மற்றும் அவரது கணவர் சேகர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சேலம் மாநகர காவல் ஆணையாளரிடம் மனு வழங்கினர்

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த ஊராட்சி மன்ற தலைவர் ராதா செல்வம் கூறுகையில் ஊராட்சியில் எந்த ஒரு பணிகளையும் செய்ய விடாமல் ஒன்றிய செயலாளர் தடுத்து வருகிறார் மேலும் இந்த குடிநீர் இணைப்பு பணிகளையும் மேற்கொள்ள விடாமல் ஒருவர் வீட்டிற்கும் பத்தாயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் வரை என்னிடம் வழங்க வேண்டும் என்னிடம் கேட்காமல் எந்த ஒரு பணியையும் செய்யக்கூடாது என்று மிரட்டி வருகிறார் இதனால் மக்கள் பணிகள் செய்ய முடியவில்லை மக்கள் பணிகளை செய்ய விடாமல் தடுத்து நிறுத்தியது கொலை மிரட்டல் விடுத்தது போன்ற காரணங்களுக்காக காவல் ஆணையாளரிடம் மனு கொடுத்துள்ளோம் இதை விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக சேலம் மாநகர காவல் ஆணையாளர் கூறினார்

# மயிலாடுதுறை மின்வாரிய கோட்ட செயற் பொறியாளர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் சங்கக் கொடியேற்றம்



மயிலாடுதுறை, மே. 2

மயிலாடுதுறையில் உழைப்பாளர் தினத்தையொட்டி மயிலாடுதுறை மின்வாரிய கோட்ட செயற் பொறியாளர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் சங்கக் கொடியேற்றப்பட்டது. மயிலாடுதுறை மின்வாரிய கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் மே தின விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி மயிலாடுதுறை மின்வாரிய கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு சங்கத்தின் திருச்சி வட்டார செயலாளர் சரவணகுமார் சங்கக் கொடியேற்றி, இனிப்பு வழங்கினார். நாகை திட்ட செயலாளர் எஸ். மணிகண்டன், கோட்ட செயலாளர் செந்தில்குமார், துணைச் செயலாளர்கள் செல்வகுமார், பிரபாகரன், திட்ட பொருளாளர் சங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் குடிநீர் வழங்கல் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம்: மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



தென்காசி, மே.2

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் குடிநீர் வழங்கல் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான செயற்பொறியாளர், நகராட்சி ஆணையாளர்கள், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), செயல் அலுவலர்கள், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தென்காசி மாவட்டத்திற்குட்பட்ட ஊரக மற்றும் நகர்ப் புற பகுதிகளில் கோடைக் காலத்தில் குடிநீர்தட்டுப்பாடு வராமல் சீராக குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து துறைஅலுவலர்களுக்கும் மாவட்ட கலெக்டர் அறிவுரை வழங்கினார்.

# வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வி.களத்தூர் ராயப்ப நகரில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம்

பெரம்பலூர், மே.2

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வி.களத்தூர் ராயப்ப நகரில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது வேப்பந்தட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) செல்வமணியன் தகவல் தெரிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம், வி.களத்தூர் ஊராட்சிக்குட்பட்ட ராயப்ப நகரில் ஆழ்துளை கிணறுடன் சிமெண்ட் தொட்டி பழுது நீக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. போர்வெல் சரி செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது. . பழுது நீக்கம் செய்து மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், புதியதாக வி.களத்தூர் மேலத்தெரு ஆழ்துளை கிணறு மற்றும் பைப் லைன் அமைத்து ராயப்ப நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

# அலங்காநல்லூரில் மின் அமைப்பாளர்கள் நல சங்கத்தின் சார்பாக மே தினத்தை முன்னிட்டு சங்கத்தின் பெயர் பலகை திறப்பு



அலங்காநல்லூர்.மே.02

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் மின் அமைப்பாளர் நல சங்கத்தின் சார்பில் மே தின உழைப்பாளர்கள் தின விழா கொண்டாட்டம் நடைபெற்றது.

ஸ்ரீ முனியாண்டி சுவாமி திருக்கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபாடு நடைபெற்றது பின்னர் பழைய காவல் நிலையம் எதிரே உள்ள சங்கப் பெயர் பலகை சீனிவாசன் திறந்து வைத்து மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து வாடிவாசல் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தின் முன்பு உள்ள மின் அமைப்பாளர் மத்திய சங்கத்தின் கொடியினை சங்க கவுரவ ஆலோசகர் எம்.எஸ். ராயல், ஏற்றி வைத்தார் கௌரவத் தலைவர் அலாவுதீன் மற்றும் உறுப்பினர்களும் சேர்ந்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர். பின்னர் அறிவிமலை கோவில் வளாகத்தில் சங்க கூட்டம் நடைபெற்றது.

இதில் தலைவர் ரவி, தலைமை தாங்கினார் செயலாளர் வெள்ளகெங்கை, உறுப்பினர்கள் ஒரே மாதிரியான புதிய ரேட்டாப் செடியுல் படி வேலைக்கான ஊதியம் பெற வேண்டும் வேலையில் பாதுகாப்புடன் பாதுகாப்பு உபகரணங்களை கொண்டு வேலை செய்ய வேண்டும் என தீர்மான நகலை வாசித்தார்.

பொருளாளர் ஆனந்த், கலந்து கொண்டு 2023 2024 க்குகாண வரவு செலவு அறிக்கைகளை சமர்ப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில் செயற் குழு உறுப்பினர்கள் ராஜாங்கம், ஆறுமுகம், பலராமன், ஜெயபிரகாஷ், வெடிமுத்து, ஆகியோர் புதிய கருத்துக்களை தெரிவித்தனர். வேலு, பிரகாஷ், செல்வம், ராமு, முருகன், லெட்சுமணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் வயரிங் காண்ட்ராக்டர் விநாயகராஜா, நன்றி தெரிவித்தார்.

# காவல் உதவி ஆய்வாளருக்கு பணி ஓய்வு பாராட்டு விழா



தஞ்சாவூர்,மே.2

தஞ்சை மாவட்ட காவல் துறை மில் 36 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றிய ஆய்வாளர் பார்த்திபன் விருப்ப ஓய்வு பெற்றார். அவருக்கு பணி ஓய்வு பாராட்டு விழா தஞ்சை நாஞ்சிக்கோட்டை பைபாஸ் அருகே உள்ள அனிதா பார்த்திபன் ஓட்டல் அரங்கில் நடந்தது. விழாவிற்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ஓய்வு) அல்மாஸ் அலி தலைமை தாங்கினார்.

ஓய்வு பெற்ற காவல் துணை கண்காணிப்பாளர் கணேசமூர்த்தி வரவேற்றார். தஞ்சை குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி நிதி அலுவலர் ராஜாராம் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற காவல் அதிகாரி தவமணி கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார். மேலும் சாய் குழுமம் சின்னத்துரை பள்ளி தோழர் நாவுக்கரசர் ஒரத்தநாடு பத்திரிகையாளர் துரைசெல்வன் சாப்ட்வேர் கம்பெனி முதன்மை செயல் அதிகாரி அப்சர் ஓய்வு பெற்ற காவல் துணை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் பார்த்திபனை பாராட்டியும் வாழ்த்தியும் பேசினர். விழாவில் ஒப்பந்தக்காரர் வடுவூர் ரவி வம்பாளியார் மற்றும் ஏராளமான தொழில் அதிபர்கள் முன்னாள், இன்னாள் காவல் அதிகாரிகள் ஆண், பெண் காவலர்கள் ரோட்டரி, லயன்ஸ், வர்த்தக சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு பார்த்திபனுக்கு சால்வை, மாலைகள் அணிவித்து வாழ்த்தினர். முடிவில் பணி ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் பார்த்திபன் ஏற்புரை ஆற்றினார். விழா நிகழ்ச்சிகளை முருகையன் பாபு தொகுத்து வழங்கினார்.

# பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல்: மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் திறந்து வைத்தனர்



பெரம்பலூர், மே.2

பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

தமிழகம் முழுவதும் வெயில் தாக்கம் அதிகமாக இருக்கிறது. பொது மக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆணைக்கினங்க, பெரம்பலூர் நகர தி.மு.க.சார்பில், கோடை கால தண்ணீர் பந்தல், பெரம்பலூர் ஸ்டேட் பேங்க் அருகில் அமைக்கப்பட்டிருந்தது. பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர் பந்தலை, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் திறந்து வைத்து, நீர்,மோர், பானகம், தர்பூசணி, இளநீர்,வெள்ளரிக்காய் ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி,

மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி. இராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், மாவட்ட பொருளாளர் செ. ரவிச்சந்திரன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், நகர துணை செயலாளர் சபியுல்லா, நகர பொருளாளர் முத்துகுமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ. அப்துல் கரீம், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பா.ரினோபாஸ்டின்,,

நகராட்சி உறுப்பினர்கள் சித்தார்த், சேகர், சிவக்குமார், வார்டு செயலாளர்கள் கார்த்திகேயன், விஜி, அஜய் ரோஹித், பசும்பலூர் கிளைச் செயலாளர் ஜெயபால் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தர்மராஜ சுவாமி கோவில் தேர்த்திருவிழா முறம், துடைப்பத்தால் அடி வாங்கிய பக்தர்கள்



கெலமங்கலம், மே2

கிருஷ்ணகிரி மாவட்டம் சானமாவு ஊராட்சியில் உள்ள டி.கொத்தப்பள்ளி கிராமத்தில் உள்ள திரவுபதி தர்மராஜ சுவாமி கோவிலில் 385 ம் ஆண்டு தேர்த்திருவிழா கடந்த மாதம் 22 ம் தேதி தொடங்கியது. தினமும் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன.

கடந்த 26 ம் தேதி தர்மராஜ திரவுபதி அம்மனுக்கு திருக்கல்யாணம் நடந்தது. நேற்று காலை தேரோட்டம் நடந்தது. டி.கொத்தப்பள்ளி, கூட்டூர், எச்.செட்டிப்பள்ளி உட்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பல ஆயிரம் பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுத்தனர். அருள் வந்து ஆடிய கோவில் பூசாரி முறம் மற்றும் துடைப்பத்தால் பக்தர்களை அடித்து ஆசி வழங்கினார்.

பக்தர்களும் விரும்பி அடி வாங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர். இதன் மூலம் பில்லி, சூனியம், ஏவல் போன்றவை விலகும் என்ற நம்பிக்கை பக்தர்கள் மத்தியில் உள்ளது. நேற்று இரவு 9 மணிக்கு பவளகொடி நாடகம் நடந்தது. பல ஆயிரம் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

# நடிகையை திருமணம் செய்து கொண்ட ஜெய்? வைரலாகும் புகைப்படம்




தமிழ் திரையுலகில் வித்தியாசமான படங்களில் நடித்து புகழ் பெற்றவர் நடிகர் ஜெய். திருமணம் பற்றிய கேள்விகளுக்கு தனது சிரிப்பாலேயே பதில் அளித்து கடந்து செல்வதை வாடிக்கையாக கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில், ஜெய் மற்றும் நடிகை பிரக்யா நாக்ரா திருமணம் செய்து கொண்டதை உணர்த்தும் புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது. நடிகை பிரக்யா வரலாறு முக்கியம், என்4 போன்ற படங்களில் நடித்துள்ளார்.

வைரலாகி வரும் புகைப்படத்தில் பிரக்யா கழுத்தில் தாலி அணிந்துள்ளார். இவருடன் நடிகர் ஜெய் தனது கையில் பாஸ்போர்ட் வைத்திருக்கிறார். இதே புகைப்படத்தை தனது அதிகாரப்பூர்வ சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள நடிகை பிரக்யா "கடவுள் ஆசியுடன் புதிய வாழ்க்கை தொடங்கியது," என குறிப்பிட்டுள்ளார்.

இதை பார்த்த ரசிகர்கள் நடிகர் ஜெய் திருமணம் செய்து கொண்டாரா என ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளனர். மேலும், சிலர் இந்த புகைப்படத்தின் பின்னணியில் கேமரா வைக்கப்பட்டு இருப்பதை உற்று நோக்கி இது புதிய படத்திற்கான புரமோஷனாக இருக்கலாம் என்று கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# நாகர்ஜுனாவின் ஃபர்ஸ்ட் லுக் குபேரா படத்தின் அப்டேட்




நடிகர் தனுஷின் 50வது படமான ராயன் திரைப்படம் விரைவில் திரைக்கு வரவுள்ளது. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் ஏ.ஆர் ரகுமானின் இசையில் உருவாகிவரும் இப்படத்தின் படப்பிடிப்பு எல்லாம் முடிவடைந்து தற்போது போஸ்ட் புரொடக்சன் வேலைகள் விறுவிறுப்பாக போய்க்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் ராயன் படத்தை தொடர்ந்து சேகர் கம்முலா இயக்கத்தில் 'குபேரா' என்ற திரைப்படத்தில் நடித்து வருகின்றார் தனுஷ். இப்படத்தில் தனுஷுடன் இணைந்து ராஷ்மிகா, நாகர்ஜுனா என பலர் நடித்து வருகின்றனர். தேவி ஸ்ரீ பிரசாத் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். சில வாரங்களுக்கு முன் இப்படத்தின் டைட்டில் போஸ்டர் வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்றது.

குபேரா படத்தின் படப்பிடிப்பு திருப்பதியில் நடைபெற்று வந்த நிலையில், மும்பையில் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ளதாக சென்ற வாரம் படக்குழுவினர் அறிவித்திருந்தனர். விறுவிறுப்பாக படப்பிடிப்பு நடைபெற்று வரும் நிலையில் இந்தாண்டு இறுதிக்குள் குபேரா திரையில் வெளியாகும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் படத்தின் அப்டேட் நேற்று வெளியானது படத்தின் சுவாரசியமான அப்டேட் வரும் மே 2 ஆம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழுவினர் போஸ்டரை வெளியிட்டனர். அதைத்தொடர்ந்து தற்பொழுது படக்குழுவினர் அதையொட்டி மற்றொரு அப்டேட்டை வெளியிட்டுள்ளனர். கிங் நாகர்ஜுனாவின் ஃபர்ஸ்ட் லுக்கை மே 2 ஆம் தேதி ஸ்டார் ஸ்போர்ட்ஸ் தெலுங்கு தொலைக்காட்சியில் வெளியிடப்போவதாக போஸ்டரை வெளியிட்டுள்ளனர்.

# ஜூன் 22 வெளியாகும் அடுத்த பாடல் கோட் படத்தின் அப்டேட்




நடிகர் விஜய்யின் 'தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்' படத்தை இயக்குனர் வெங்கட் பிரபு இயக்கி வருகிறார். இந்த படத்தின் சூட்டிங் சென்னை, ஐதராபாத், மாஸ்கோ உள்ளிட்ட இடங்களில் நடந்து முடிந்துள்ள சூழலில் தற்போது சென்னை பிரசாத் ஸ்டுடியோவில் திரிஷா மற்றும் விஜய்யின் காம்பினேஷன் பாடல் மிகப்பெரிய அளவில் செட் போடப்பட்டு எடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சென்னை மெட்ரோ ஸ்டேஷனில் அடுத்த கட்ட ஷூட்டிங்கை படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

தொடர்ந்து இரு வாரங்கள் இந்த படத்தின் சூட்டிங் நடைபெறும் எனவும். இப்படத்தில் விஜய்யுடன் பிரஷாந்த், பிரபுதேவா, அஜ்மல், மோகன், லைலா, மீனாட்சி சவுத்ரி, சினேகா என நடிகர் பட்டாளமே நடித்துள்ளனர். கில்லி படத்திற்கு பிறகு விஜய்யும் திரிஷாவும் இணைந்து லோகேஷ் கனகராஜ் இயக்கிய லியோ திரைப்படத்தில் நடித்தனர்.

அதைத்தொடர்ந்து கோட் திரைப்படத்திலும் விஜய்யுடன் இணைந்து நடனம் ஆடியுள்ளார். பிரசாத் ஸ்டுடியூவில் படப்பிடிப்புகளை முடித்து விட்டு அடுத்த கட்டமாக சென்னை மெட்ரோ நிலையத்தில் இரண்டு நாட்கள் படப்பிடிப்பு நடக்கவுள்ளது. தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டம் திரைப்படம் வரும் செப்டம்பர் 5 ஆம் தேதி உலகளவில் வெளியாகவுள்ளது. சமீபத்தில் படத்தில் நடித்துள்ள அஜ்மல் தனியார் தொலைக்காட்சிக்கு நேர்காணலில் படத்தின் அப்டேட்டை குறித்து பேசினார். சிஎஸ்கே ஐ.பி.எல் அணி வீரர்கள் இதில் நடித்துள்ளதாக வந்த தகவல்கள் உண்மையெனவும் , ஆனால் அது யார் என்று என்னால் சொல்ல முடியாது. படத்தின் தயாரிப்பாளர்கள் தான் அதை கூற வேண்டும் என கூறியுள்ளார். படத்தின் முதல் பாடலான விசில் போடு பாடல் வெற்றியைத் தொடர்ந்து அடுத்த பாடல் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு ஜூன் 22 ஆம் தேதி வெளியாகவுள்ளது. இந்த பாடல் ஒரு காதல் பாடலாக இருக்கும் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

# டர்போ மோட் Activated டர்போ படத்தின் புதிய அப்டேட்




மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திர நடிகர்களுள் ஒருவர் மம்மூட்டி. 1983 ஆம் ஆண்டு வெளியான 'விசா' திரைப்படத்தின் மூலம் மலையாள சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமானார். 'மௌனம் சம்மதம்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமாகினார். அதைத் தொடர்ந்து அழகன், தளபதி, மக்கள் ஆட்சி, கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன், ஆனந்தம், போன்ற படங்களில் நடித்தார்.

ராம் இயக்கத்தில் மம்மூட்டி மற்றும் அஞ்சலி இணைந்து 2018 ஆம் ஆண்டு வெளியான 'பேரன்பு' படத்தில் நடித்தனர். கடந்த ஆண்டு வெளியான நண்பகல் நேரத்து மயக்கம், கண்ணூர் ஸ்குவாட் மற்றும் சில மாதங்களுக்கு முன் பிரம்மயுகம் போன்ற வித்தியாசமான கதைக்களமுடைய படங்களைத் தேடி நடித்து வருகிறார். பிரம்மயுகம் படம் மிகப் பெரிய வெற்றியை பெற்றுக் கொடுத்தது.

அதைத் தொடர்ந்து அடுத்ததாக 'டர்போ' என்ற படத்தில் நடித்துள்ளார். மமூட்டி மற்றும் கன்னட நடிகரான ராஜ் பி ஷெட்டி இணைந்து இப்படத்தில் நடித்துள்ளனர். இப்படத்தை வைசாக் இயக்கி இருக்கிறார். வைசாக் இதற்கு முன் மோஹன்லாலை வைத்து புலிமுருகன் திரைப்படத்தை இயக்கியவர் ஆவார்.

மிதுன் மானுவேல் தாமஸ் இப்படத்தின் கதையை எழுதியுள்ளார். வரும் ஜூன் 13 ஆம் தேதி இப்படம் வெளியாகவுள்ளதாக முன்னர் படக்குழுவினர் அறிக்கைவிட்டனர். ஆனால் தற்பொழுது படம் வெளியாகும் தேதியை மாற்றியுள்ளனர். வரும் மே 23 ஆம் தேதி டர்போ திரைப்படம் வெளியாகவுள்ளது. இது குறித்து படக்குழுவினர் புதிய போஸ்டரை வெளியிட்டுள்ளனர். அதில் டர்போ மோட் ஆக்டிவேடட் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளனர்.



# கோயிலுக்கு போகாதீங்க தியேட்டருக்கு போங்க மிஷ்கினின் சர்ச்சை பேச்சு

பிரபல நடிகை சாய் தன்ஷிகா தமிழில் மாஞ்சா வேலு, பேராண்மை, கபாலி, இருட்டு போன்ற படங்களில் முக்கிய வேடத்தில் நடித்து உள்ளார். மேலும் மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட படங்களிலும் நடித்து உள்ளார். இந்நிலையில் கோல்டன் ஸ்டூடியோஸ் 23 என்ற பட நிறுவனம் சார்பில் கோமதி சத்யா தயாரிக்கும் 'தி புரூப்' என்ற புதிய படத்தில் சாய் தன்ஷிகா தற்போது முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

'ஆக்ஷன்' படமாக உருவாகும் இந்த படத்தை இயக்குனர் ராதிகா மாஸ்டர் இயக்குகிறார். ரித்விகா, அசோக் ஆகியோரும் இந்த படத்தில் நடித்து உள்ளனர்.

இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் தயாராகி வருகிறது.இந்த படத்தின் முதல் பார்வை கடந்த மாதம் வெளியானது. அதைதொடர்ந்து படத்தின் டிரைலர் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் படத்தின் இசை வெளியீட்டு விழா இன்று சென்னையில் நடைப்பெற்றது. படத்தின் பணியாற்றிய அனைவரும் இவ்விழாவில் கலந்துக் கொண்டனர். யூகி சேது, இயக்குனர் மிஷ்கின், சினேகன், ரோபோ சங்கர் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

அதில் பேசிய இயக்குனர் மிஷ்கின் கோயிலுக்கு போகாதீங்க தியேட்டருக்கு போங்க என பேசியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சமூக வலைத்தளங்களில் இது பேசும் பொருளாகி வருகிறது. கோயிலுக்கு போனாலாவது மன் நிம்மதி கிடைக்கும், சமீபத்தில் வெளிவந்த தமிழ் படங்களை தியேட்டருக்கு சென்று பார்த்தால் பிபி தன் ஏறுகிறது என ட்ரோல் செய்து வருகின்றனர். வீட்ல வெங்காயம் வெட்டிக்கிட்டே படத்தை பார்ப்பீங்களா, புருஷன் கூட சண்டை போட்டுக்கிட்டே படத்தை பார்ப்பீங்களா? புது டிரெஸ் போட்டு பர்ஃப்யூம் அடித்துக் கொண்டு காரில் ஜம்முன்னு தியேட்டருக்கு சென்று பாப்கார்ன் வாங்கிக் கொண்டு படத்தை அப்படி பார்க்க வேண்டும் என மிஷ்கின் சினிமாவை எப்படி பார்க்க வேண்டும் என பேசியுள்ளார்.

# மேட்ரிட் ஓபன் டென்னிஸ்: ஸ்வியாடெக், மேடிசன் கீஸ் அரையிறுதிக்கு முன்னேற்றம்



மேட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது.

இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக், பிரேசில் வீராங்கனை பெட்ரிஸ் மியாவை எதிர்கொண்டார்.

இதில் நம்பர் 1 வீராங்கனையான ஸ்வியாடெக் முதல் செட்டை இழந்தார். இதில் சுதாரித்துக் கொண்ட அவர் அடுத்த இரு செட்களை

60, 62 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல் அமெரிக்க வீராங்கனை மேடிசன் கீஸ், துனீசியா வீராங்கனை ஒன்ஸ் ஜபேருடன் மோதினார். இதில் மேடிசன் 06, 75, 61 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இன்று நடைபெறும் அரையிறுதியில் ஸ்வியாடெக், மேடிசன் கீஸ் மோதுகின்றனர்.

# டி20 உலகக் கோப்பை: ஆப்கானிஸ்தான் அணி அறிவிப்பு



20 அணிகள் கலந்து கொள்ளும் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி ஜூன் 2ம் தேதி முதல் 29ம் தேதி வரை வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடக்க உள்ளது. இந்தப் போட்டி தொடரில் பங்கேற்கும் 20 அணிகளும் 15 பேர் கொண்ட அணியை மே 1ம் தேதிக்குள் அறிவிக்க வேண்டும் என் ஐ.சி.சி. அறிவித்திருந்தது.

நியூசிலாந்து, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தங்களது அணிகளை அறிவித்துவிட்டது.


இந்நிலையில், டி20 உலகக் கோப்பை தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டது. இந்த அணிக்கு ரஷித் கான் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னணி வீரர்களான முகமது நபி, முஜீப் உர் ரஹ்மான், நூர் அகமது, ரஹ்மனுல்லா குர்பாஸ் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான அணி விவரம்:

ரஹ்மனுல்லா குர்பாஸ் (விக்கெட் கீப்பர்), இப்ராகிம் ஜட்ரன், நஜிபுல்லா ஜட்ரன், முகமது இஷாக் (விக்கெட் கீப்பர்), ஹஷ்மத்துல்லா ஓமர்சாய், முகமது நபி, குல்பாடின் நைப், கரீம் ஜனத், ரஷீத் கான் (கேப்டன்), நங்யால் கரோட்டி, முஜீப் உர் ரஹ்மான், நூர் அகமது, நவீன் உல் ஹக், பசல்ஹக் பரூக்கி, பரீட் அகமது மாலிக்.

ரிசர்வ் வீரர்கள்; செடிக் அடல், ஹஜ்ரத்துல்லாஹ் ஜஜாய், சலீம் சபி.

# மேட்ரிட் ஓபன் டென்னிஸ்: அதிர்ச்சி தோல்வி அடைந்த நடால், ஸ்வரேவ்



மேட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுகள் நேற்று நடந்தன. இதில் நம்பர் 5 வீரரான ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வரேவ், அர்ஜெண்டினாவின் பிரான்சிஸ்கோவுடன் மோதினார்.

இதில் ஸ்வரேவ் 36, 46 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

இதேபோல், ஸ்பெயின் வீரர் ரபேல் நடால், செக் வீரர் ஜிரி லெஹெகாவுடன் மோதினார். இதில் நடால் 57, 46 என்ற நேர் செட்களில் தோற்று தொடரில் இருந்து வெளியேறினார்.

# ஐ.பி.எல். 2024: ஸ்டாயினிஸ் அதிரடி மும்பையை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய லக்னோ



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. லக்னோவில் நடைபெற்ற இந்த போட்டியில் மும்பை அணி முதலில் பேட்டிங் செய்தது.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு துவக்க வீரரான ரோகித் சர்மா 4 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா முறையே 10 மற்றும் 7 ரன்களில் ஆட்டமிழந்தனர். தொடர்ச்சியாக விக்கெட்டுகள் சரிந்த நிலையில், களமிறங்கிய கேப்டன் ஹர்திக் பாண்டியா ரன் ஏதும் எடுக்காமல், தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே அவுட் ஆகி பெவிலியன் திரும்பினார்.

இவரை தொடர்ந்து களமிறங்கிய நேஹல் வதீரா நிதானமாக ஆடி 46 ரன்களை சேர்த்தார். துவக்க வீரராக களமிறங்கிய இஷான் கிஷன் பொறுப்புடன் ஆடி 32 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார். போட்டி முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 144 ரன்களை குவித்தது.

எளிய இலக்கை துரத்திய லக்னோ அணிக்கு அர்ஷின் குல்கர்னி ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். கேப்டன் கே.எல். ராகுல் 22 பந்துகளில் 28 ரன்களை குவித்து ஆட்மிழந்தார். அடுத்து களமிறங்கிய மார்கஸ் ஸ்டாயினிஸ் அதிரடியாக ஆடி 44 பந்துகளில் 62 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார்.

லக்னோ அணி 19.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 145 ரன்களை குவித்து, நான்கு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மும்பை இந்தியன்ஸ் சார்பில் கேப்டன் ஹர்திக் பாண்டியா 2 விக்கெட்டுகளையும், துஷாரா, கோட்சி, முகமது நபி தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

# பிசிசிஐ புறக்கணித்த நிலையில் கேஎல் ராகுல் குறித்து எல்எஸ்ஜி டுவிட் பதிவு

வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் ஜூன் மாதம் நடைபெற இருக்கும் டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. 15 பேர் கொண்ட இந்திய அணியிலும், காத்திருப்போர் பட்டியலிலும் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான கே.எல். ராகுலுக்கு இடம் கிடைக்கவில்லை.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஐபிஎல் தொடரில் களம் இறங்கிய ரிஷப் பண்ட், ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடி வரும் சஞ்சு சாம்சன் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவரும் விக்கெட் கீப்பர்பேட்ஸ்மேன்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கே.எல். ராகுல் புறக்கணிக்கப்பட்டதற்கு டுவிட்டர்வாசிகள் தங்களது விமர்சனங்களை பதவிட்டு வருகிறார்கள். ரிஷப் பண்ட்ன் சாதனையை கே.எல். ராகுல் சாதனையுடன் ஒப்பிட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் ஐபிஎல் தொடரில் கே.எல். ராகுல் விளையாடி வரும் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணி ஒரு தனது டுவிட்டர் பக்கத்தில் ஒரு போஸ்ட் பதிவிட்டுள்ளது. அதில் "கே.எல். ராகுல் எப்போதும் எங்களுடைய நம்பர் ஒன்" எனக் குறிப்பிட்டுள்ளது.



உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்

விளக்கம்:

உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.